# A

**18233** **120 MINUTES**

1. பதிற்றுப்பத்து ஏழாம் பத்தில் புகழ்ந்து பாடப்படும் மன்னன் யார்?
   A) கடல்பிறகோட்டிய செங்குட்டுவன்
   B) செல்வக்கடுங்கோ வாழியாதன்
   C) செல்குழுகுட்டுவன்
   D) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

2. ”வாரார் ஆயினும் வரினும் அவர் நமக்கு யாராகியரோ” என்னும் கூற்று எந்தச் சூழ்நிலையில் எழுந்தது?
   A) வாயில் மறுத்தபோது B) வரைவுகடாயபோது
   C) உடன்போக்கு சென்றபோது D) பருவம் கண்டு அழிந்தபோது

3. ஆராய்ந்தெழுதுக
   1. நல்ல என்னும் சிறப்பினைப் பெற்றநூல் குறுந்தொகை
   2. தொகைநூல்களில் முதலாவதாகத் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை
   3. குறுந்தொகை நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடி பேரெல்லையும் கொண்டது
   4. ‘யாயும் ஞாயும் யாராகியரோ’ எனத் தொடங்கும் பாடல்குறுந்தொகையில் இடம்பெறுகின்றது.

   A) 1,2 சரி B) 2, 3 சரி
   C) 1, 2, 3 சரி D) அனைத்தும் சரி

4. குறிஞ்சிப்பாட்டின் பாடுபொருளாகக் கருதப்படுவது எது?
   A) இற்செறிப்பு B) அறத்தொடு நிற்றல்
   C) வேலன்வெறியாட்டு D) பொருள்வயிற்பிரிதல்

5. பொருத்துக
   a. பழியொடு படராப் பஞ்சவ வாழி — 1. பாண்டியமன்னன்
   b. நற்றிறம் படராக் கொற்கை வேந்தே — 2. வாயிற்காவலன்
   c. கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல் — 3. கண்ணகி
   d. யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே — 4. கோப்பெருந்தேவி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 4 | 3 | 2 |

6. திரிகடுகத்தின் ஆசிரியர்?

A) மூவாதியார் B) காரியாசான்

C) நல்லாதனார் D) விளம்பிநாகனார்

7. ”பிடர்த்தலை பீடமேறிய மடக்கொடி’’ என்பது யாரைக் குறிப்பிடுகின்றது ?

A) பிடாரி B) கண்ணகி C) மாதவி D) கொற்றவை

8. ஆராய்ந்தெழுதுக

1. அப்பரின் இன்னொரு பெயர் தருமசேனன் என்பதாகும்
2. அப்பர் தேவாரம் ஏழாம் திருமுறையில் உட்படுத்தப்பட்டுள்ளது.
3. அப்பர் முதலில் சமண சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.
4. மாசில் வீணையும் எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் அப்பர்.

A) 1, 3, 4 சரி B) 2, 3, 4 சரி

C) 2, 3 சரி D) அனைத்தும் சரி

9. “நள்ளென் யாமத்தும் பள்ளிகொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்” இவ்வரிகள் இடம்பெறும் நூல் எது?

A) சிறுபாணாற்றுப்படை B) குறிஞ்சிப்பாட்டு

C) முல்லைப்பாட்டு D) நெடுநல்வாடை

10. பொருத்துக

a. கௌவை அஞ்சின் காமம் எய்க்கும் 1. குறிஞ்சிப்பாட்டு

b. நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ 2. குறுந்தொகை

c. குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள் 3. பதிற்றுப்பத்து

d. பாவை அன்ன நல்லோள் கணவன் 4. நெடுநல்வாடை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

11. தேம்பாவணியில் வளன் என்னும் பெயர் யாரைக் குறிக்கின்றது?

A) ஜேக்கப் B) ஜான் C) ஜோசப் D) ஜெயிம்ஸ்

12. ஆராய்ந்தெழுதுக

1. தேம்பாவணி 1500 பாடல்களால் ஆனது.
2. தேம்பாவணியின் ஆசிரியர் வீரமாமுனிவர்
3. தேம்பாவணி ஏசுநாதரின் வாழ்க்கையைப் பாடுகின்றது
4. வீரமாமுனிவரைக் கிறிஸ்தவக் கம்பர் என்று பாராட்டுவர்

A) 1, 3, 4 சரி B) 2, 3 சரி
C) 2, 4 சரி D) அனைத்தும் சரி

13. “என் கடன் பணிசெய்து கிடப்பதே” என்று பாடியவர்

A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர்
C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

14. ஆராய்ந்தெழுதுக

1. திரிகடுகம் 90 வெண்பாக்களால் ஆனது
2. இந்நூலைப் பாடியவர் காரியாசான்
3. திரிகடுகத்தில் ஒவ்வொரு பாடலிலும் மூன்று கருத்துக்கள் சொல்லப்படுகின்றன
4. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று

A) 1,2 சரி B) 1, 3, 4 சரி
C) 3,4 சரி D) அனைத்தும் சரி

15. “உலகம் தழீஇயது ஒட்பம்.” இங்கு ஒட்பம் என்பதன் பொருள் என்ன?

A) அறிவு B) அன்பு C) ஒற்றுமை D) நன்மை

16. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் யார்

A) சீதக்காதி B) அகமது மரைக்காயர்
C) சடையப்பவள்ளல் D) மஸ்தான் சாகிப்

17. சரியான அதிகார வரிசை எது?

A) பெரியாரைத்துணைக்கோடல், குற்றங்கடிதல், அறிவுடைமை, சிற்றினம் சேராமை
B) சிற்றினம் சேராமை, பெரியாரைத்துணைக்கோடல், குற்றங்கடிதல், அறிவுடைமை
C) குற்றங்கடிதல், பெரியாரைத்துணைக்கோடல், அறிவுடைமை, சிற்றினம் சேராமை
D) அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத்துணைக்கோடல், சிற்றினம் சேராமை

18. திருப்பாவையில் "கூர்வேல் கொடுந்தொழிலன்" என்பது யாரைக் குறிப்பிடுகின்றது?

A) கண்ணன் B) நந்தகோபன் C) பரசுராமன் D) இராமன்

19. "உலகினில் பிறந்துவரும் எழுவகைக்கு உயிரெனும் சலதரக் கவிகை" என்னும் பாடலடி இடம்பெறும் நூல் எது?

A) கம்பராமாயணம் B) தேம்பாவணி

C) சீறாப்புராணம் D) திருப்பாவை

20. பொருத்துக

a. கனிவாய் மடமயில் 1. அவ்வுறக்கத்

b. முருகவிழ்புய வள்ளல் 2. ஜபுறயீல்

c. வானோர் அரசன் 3. முகம்மது நபி

d. பலகலை தெரிந்தோன் 4. கதீஜா

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 1 | 3 |
| B) | 3 | 2 | 4 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 1 | 3 | 4 | 2 |

21. சுந்தரகாண்டத்தின் முக்கிய கதாபாத்திரம்

A) அனுமன் B) பரதன் C) அங்கதன் D) இலக்குவன்

22. ஆராய்ந்தெழுதுக

1. கம்பராமாயணத்தின் ஐந்தாவது காண்டம் சுந்தரகாண்டம்
2. சுந்தரகாண்டம் பதினெட்டு படலங்களைக் கொண்டது
3. சுந்தரகாண்டம் அனுமனின் அறிவுக்கூர்மையையும் சொல்வன்மையையும் விளக்குகிறது
4. "உறங்குகின்றபோது உயிருண்டல் குற்றம் என்று ஒழிந்தேன்" என்னும் கூற்று சுந்தரகாண்டத்தில் இடம்பெறுகின்றது.

A) 1, 2, 3 சரி B) 1, 2, 4 சரி

C) 1, 2, 3 சரி D) அனைத்தும் சரி

23. பதிற்றுப்பத்துப் பாடல்கள் பாடிய புலவர்களுள் இடம்பெறாதவர்

A) கபிலர் B) காப்பியாற்றுக்காப்பியனார்

C) காக்கைபாடினியார் D) நக்கீரர்

24. “அணிகொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்கு அப்பாலை மணலொன்று காணாமல் வரையெடுத்து மயங்கினவே” இப்பாடலில் மறைந்திருக்கும் புராண நிகழ்வு எது?

A) வாலி சுக்கிரீவன் போர்

B) அனுமன் சஞ்சீவி மலையை எடுத்துவருதல்

C) சேதுஅணை கட்டுதல்

D) அனுமனின் வாலில் தீ பற்றவைத்தல்

25. “தொடுக்கும் கடவுள் பழம்பாடல்” எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் எது?

A) நந்திக்கலம்பகம்

B) மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ்

C) திருப்பாவை

D) அப்பர் தேவாரம்

26. ஆராய்ந்தெழுதுக

1. கலிங்கத்துப்பரணி ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று
2. கலிங்கத்துப்பரணியைப் பாடியவர் ஜெயங்கொண்டார்
3. இந்நூல் கலிங்கநாட்டு மன்னனின் புகழைப் பாடுகின்றது
4. பரணிநூல்களில் இதுவே முதல் நூலாகக் கருதப்படுகின்றது

A) 1, 2 சரி B) 1, 4 சரி C) 3, 4 சரி D) 2, 4 சரி

27. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ் பாடியவர் யார்?

A) குமரகுருபரர் B) தாயுமானவர்

C) அருணகிரிநாதர் D) இராமலிங்க வள்ளலார்

28. சரியான பருவ வரிசை எது?

A) அம்மானைப்பருவம், அம்புலிப்பருவம், நீராடல்பருவம், ஊஞ்சல்பருவம்

B) நீராடல்பருவம், அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், ஊஞ்சல்பருவம்

C) அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், நீராடல்பருவம், ஊஞ்சல்பருவம்

D) ஊஞ்சல்பருவம், அம்புலிப்பருவம், அம்மானைப்பருவம், நீராடல்பருவம்

29. கௌரியர் குலம் எனப்படுவது எந்தக் குலம்?

A) சோழர் குலம் B) பாண்டியர் குலம்

C) சேரர் குலம் D) சாளுக்கியர் குலம்

30. கீழ்வரும் நூல்களின் சரியான காலவரிசை எது?

A) நந்திக்கலம்பகம், கலிங்கத்துப்பரணி, மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ், குற்றாலக்குறவஞ்சி

B) கலிங்கத்துப்பரணி, நந்திக்கலம்பகம், மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ், குற்றாலக்குறவஞ்சி

C) நந்திக்கலம்பகம், மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ், குற்றாலக்குறவஞ்சி, கலிங்கத்துப்பரணி

D) குற்றாலக்குறவஞ்சி, கலிங்கத்துப்பரணி, மீனாட்சியம்மைப்பிள்ளைத்தமிழ், நந்திக்கலம்பகம்

31. பொருத்துக

| | |
|---|---|
| a. மானுடர்போல் சித்தநிலை வாய்த்திருக்கும் செய்தி ஏன் | 1. மாமுனிவர் |
| b. அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டீர் | 2. குயில் |
| c. ஆடவனாத் தோன்றி அதன்பயனை இன்று பெற்றேன் | 3. நெட்டைக்குரங்கன் |
| d. பட்டப்பகலிலே பாவிமகள் செய்தியைப் பார் | 4. சேரன் மகன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 1 | 4 | 3 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 3 | 4 | 1 |

32. "காலங்களின் தோளில் பவனிவரும் இந்த மகாகவிதையில் எழுத்துக்களுக்கிடையே தேங்கும் மௌனம் நான்." இவ்வரிகள் இடம்பெறும் நூல்

A) ஆலாபனை

B) ஒரு கிராமத்து நதி

C) தமிழச்சியின் கத்தி

D) அவ்வை

33. ஆராய்ந்தெழுதுக

1. ஆலாபனை புதுக்கவிதைகளின் ஒரு தொகுப்பு
2. ஆலாபனை என்பதன் பொருள் ஒரு ராகத்தை விரிவாகப் பாடுவது என்பதாகும்
3. இந்நூலுக்கு சாகித்ய அக்காதமி விருது கிடைத்தது
4. இந்நூலின் ஆசிரியர் மு.மேத்தா

A) 2, 3, 4 சரி

B) 2, 4 சரி

C) 1, 2, 3 சரி

D) அனைத்தும் சரி

34. ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் அக்னிச் சிறகுகள் நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்

A) அருண்திவாரி B) மு. சிவலிங்கம்

C) காந்தி கண்ணதாசன் D) புவியரசு

35. பொருத்துக

| | |
|---|---|
| a. கள்ளிருந்த பூவோ களிவண்டோ மாது விழி | 1. திம்மன் |
| b. மலையும் தூளாகும் நல்ல மானிகள் உளம் துடித்தால் | 2. சேரியர் |
| c. மாதுதனை எனைவிட்டுப் பிரிப்பதற்கேவம்பன் இது செய்தானோ | 3. சுப்பம்மா |
| d. கூரையைக் கொளுத்திய தீயர் எவர், உமக்கு கொடுமை இழைத்தவர் யார்? | 4. சுதரிசன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 1 | 4 | 3 |

36. ஆராய்ந்தெழுதுக

1. ஏ.பி.ஜே. அப்துல்கலாம் 1931 அக்டோபர் 15 ஆம் நாள் பிறந்தார்
2. அய்யாதுரை சாலமன் என்பவர் கலாம் அவர்களின் அன்பிற்குரிய ஆசிரியர்
3. கலாம் அவர்களுக்கு கலீல் ஜிப்ரானின் படைப்பை வாசிக்கும் பழக்கம் இருந்தது
4. 1981 ஆம் ஆண்டு அப்துல்கலாம் அவர்களுக்கு பத்மபூஷண் விருது கிடைத்தது.

A) 1, 2, 3 சரி B) 1, 3 சரி C) 2, 4 சரி D) அனைத்தும் சரி

37. உதியன் என்பது யாரைக் குறிக்கிறது?

A) பாண்டியன் B) சோழன் C) சேரன் D) பல்லவன்

38. பொருத்துக

| | |
|---|---|
| a. நெருப்பையும் கறையான் அரிக்குமோ | 1. சகடன் |
| b. மாற்றம் கேளா மக்கள் கூற்றுவர் | 2. குடிலன் |
| c. நேசமில் வதுவை நாச காரணமே | 3. மனோன்மணி |
| d. ஆத்திரம் தனக்குச் சாத்திரம் என்னை? | 4. வாணி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 4 | 1 | 3 |

39. ஆராய்ந்தெழுதுக

1. அளம் நாவலின் ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன்
2. அளம் நாவல் ஊப்பளத்தைப் பின்புலமாகக்கொண்டது
3. இந்நாவலின் முக்கிய கதாபாத்திரம் சுந்தராம்பாள்
4. அளம் நாவல் பெண் உழைப்பை மையக்கருத்தாகக் கொண்டது

A) 1, 2, 3 சரி B) 1, 3, 4 சரி C) 1, 3 சரி D) 2, 3, 4 சரி

40. இன்குலாப்பின் இயற்பெயர் என்ன?

A) விக்ரமாதித்யன் B) சாகுல் ஹமீத்
C) அப்துல்ரகுமான் D) இராஜேந்திரன்

41. இன்குலாப்பின் படைப்பு அல்லாதது எது?

A) குறிஞ்சிக்கூத்து B) ஔவை நாடகம்
C) கறுப்பு மலர்கள் D) மணிமேகலை

42. இடைநாவும் அண்ணமும் இணைந்து பிறக்கும் ஒலி எது?

A) ஞ B) ண C) ந D) ன

43. “இக்கின் இகரம் இகரமுனையற்றே” என்னும் சாரியைப்புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு

A) பரணியாற்கொண்டான் B) சித்திரைக்குக்கொண்டான்
C) ஆடிக்குக்கொண்டான் D) பனியிற்கொண்டான்

44. ஆராய்ந்தெழுதுக

1. புணர்ச்சி நான்கு நிலைகளில் அமையும்
2. புணர்ச்சியில் மூவகைத் திரிபுகள் உள்ளன
3. வேற்றுமை, அல்வழி என இருவகைப்புணர்ச்சி உண்டு
4. எவ்வகை மாற்றமும் இன்றி சொற்கள் புணர்வதுண்டு

A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி
C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

45. குட்டுவன் என்பது எவ்வாறு அமைந்த பெயர்?

A) பண்பினால் பெற்ற பெயர் B) உடைமையால் பெற்ற பெயர்
C) கூட்டத்தால் பெற்ற பெயர் D) கருவியால் பெற்ற பெயர்

46. வினாவுடை வினைச்சொல் எதிர்மறுத்தும் பொருளுணர்த்தும் என்பதற்கு எடுத்துக்காட்டு

A) அவள் செய்வதென்ன? B) அரிசி உளதோ?

C) யான் வைதேனா? D) எங்கு சென்றீர்?

47. ஆராய்ந்தெழுதுக

1. வினையெச்சம் வினைகொண்டு முடியும்
2. செய்து முதல் செயற்கு ஈறாக வினையெச்ச வாய்பாடுகள் ஒன்பதாகும்
3. வினையெச்சங்கள் அடுக்கி வருவதில்லை
4. வினையெச்சத்தைத் தொல்காப்பியர் வினையெஞ்சுகிளவி எனக் குறிப்பிடுகிறார்

A) 1, 2, 4 சரி B) 1, 2, 3 சரி

C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

48. இயற்பெயர் எத்தனை வகைப்படும்?

A) எட்டு B) ஆறு C) நான்கு D) இரண்டு

49. வஞ்சி என்னும் புறத்திணை எந்த அகத்திணைக்குப் புறனாயது?

A) பாலை B) குறிஞ்சி C) மருதம் D) முல்லை

50. ஆராய்ந்தெழுதுக

1. மருத நிலத்தைத் தீம்புனல் உலகம் என்றும் கூறுவர்
2. வருணன் மருதநிலக் கடவுளாவான்
3. வைகறையும் விடியலும் மருதநிலத்திற்குரிய காலம்
4. ஊடல் மருதநில உரிப்பொருளாகும்

A) 1, 3, 4 சரி B) 1, 2, 3 சரி

C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

51. கீழ்வருவனவற்றுள் நிரையசை எது?

A) வேல் B) சுறா C) ஆ D) கண்

52. பொருத்துக

a. ஈரசைச்சீர் நான்கு — 1. ஆசிரிய உரிச்சீர்

b. நேரீற்று மூவசைச்சீர் — 2. பொதுச்சீர்

c. நிரையீற்று மூவசைச்சீர் — 3. வெண்பா உரிச்சீர்

d. நாலசையினாலாகிய சீர் — 4. வஞ்சி உரிச்சீர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 1 | 3 | 4 | 2 |

53. வெண்பா உரிச்சீர் நின்று, தன் வரும்சீர் முதலசையோடு ஒன்றாதது எது?

A) இயற்சீர் வெண்டளை B) வஞ்சித்தளை

C) கலித்தளை D) வெண்சீர் வெண்டளை

54. ”பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇ” என்பதன் அடிப்படையில் எழுந்த நூல் எது?

A) மதுரைக்காஞ்சி B) நெடுநல்வாடை

C) பட்டினப்பாலை D) மலைபடுகடாம்

55. “திருமுகம் போல் மலரும் செய்ய கமலம்” என்பது எவ்வகை உவமையணி?

A) விபரீத உவமையணி B) இன்சொல் உவமையணி

C) விகார உவமையணி D) தொகை உவமையணி

56. கீழ்வருவனவற்றுள் தீவக அணிக்கு எடுத்துக்காட்டு எது?

A) நீலமணி மிடற்றன்ன நீண்ட சடைமுடியான்

B) சிவந்தன வேந்தன் திருநெடுங்கண் வேந்தர் ஏந்து தடந்தோள் இழிகுருதி

C) செவ்வாய் நகையரும்பச் செங்கை தளிர்விளங்க மைவாள் நெடுங்கண்

D) தள்ளாவிடத்தேர் நடந்தாமரையுடைய

57. தீவக அணி எத்தனை வகைப்படும்?

A) 6 B) 8 C) 10 D) 12

58. இயற்கையாகத் தோன்றும் ஒரு நிகழ்ச்சியில் கவிஞன் தன் கற்பனையை ஏற்றிக்கூறுவது?

A) தற்குறிப்பேற்ற அணி B) உருவக அணி

C) பிறிதுமொழிதல் அணி D) வேற்றுமையணி

59. ”செவ்வாய்த் தளிரும் நகை முகிழும் கண் மலரும் மைவார் அளகம்” என்பது எவ்வகை உருவக அணி?

A) விரி உருவகம்  B) தொகை உருவகம்
C) இயைபு உருவகம்  D) சிலேடை உருவகம்

60. பொருத்துக

a. ப  1. முதல்நா அண்ண ஒலி
b. வ  2. நுனிநா அண்ண ஒலி
c. ட  3. இதழ் ஒலி
d. க  4. பல்லிதழ் ஒலி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 1 | 3 | 2 | 4 |

61. வேற்றுமை உருபுகளின் சரியான வரிசை எது?

A) ஒடு, கு, இன், ஐ  B) இன், ஐ, கு, ஒடு
C) ஐ, கு, ஒடு, இன்  D) ஐ, ஒடு, கு, இன்

62. ஆராய்ந்தெழுதுக

1. பல், உள்நாக்கு, குரல்வளை, உதடு ஆகியவை ஒலியுறுப்புக்கள்
2. இதழ்குவி உயிர், இதழ்விரி உயிர் என இருநிலைகளில் உயிரெழுத்துக்கள் பிறக்கும்
3. தொல்காப்பியர் எழுத்து என்று கூறுவதை மொழியியலார் உருபன் என்பர்
4. தமிழ்மொழிச் சொற்கள் பின்னொட்டுக்களை ஏற்பதில்லை

A) 1, 2, 3 சரி  B) 2, 3 சரி  C) 1, 2 சரி  D) 2, 3, 4 சரி

63. டாக்டர் கால்டுவெல் குறிப்பிட்ட திராவிடமொழிகள் எத்தனை?

A) 10  B) 12  C) 15  D) 16

64. மொழியியல் துறைக்கு மகத்தான பங்களிப்பை வழங்கியவர்

A) டாக்டர் ந. சஞ்சீவி
B) டாக்டர் எஸ்.வி. சுப்பிரமனியம்
C) டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம்
D) டாக்டர் மா. இளையபெருமாள்

65. முழுச்சொற்கள் சொற்றொடராவதை விளக்குவது

A) தொடரியல் B) புணரியல் C) உருபனியல் D) பிறப்பியல்

66. ஆராய்ந்தெழுதுக

1. திராவிடமொழிகளை ஒப்பீடு செய்தவர் டாக்டர் கால்டுவெல்
2. திராவிடமொழிகளில் மிகவும் நெருங்கிய தொடர்புடையவை கன்னடமும் மலையாளமும்
3. எழுத்துவடிவமும் இலக்கியவளமும் உடைய மொழிகள் திருந்திய மொழிகள் எனப்படும்
4. திராவிடமொழிகள் ஒட்டுநிலை மொழிகளாகும்

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி C) 1, 2, 4 சரி D) 1, 3, 4 சரி

67. கீழ்வரும் திராவிட மொழிகளில் திருந்தாமொழி எது?

A) துளு B) கோண்டு C) கன்னடம் D) தெலுங்கு

68. சூடாமணி நிகண்டுவின் ஆசிரியர் யார்?

A) கயாதரர் B) திவாகரர் C) மண்டலபுருடர் D) காங்கேயர்

69. தமிழ்ச்சொற்களுக்கு இலத்தீன், பிரஞ்சு, போர்த்துகீசியமாகிய மொழிகளிலும் விளக்கம் கூறும்அகராதி எது?

A) சதுரகராதி B) தமிழ்ப்பேரகராதி
C) தற்காலத் தமிழகராதி D) வின்ஸ்லோ அகராதி

70. ஆராய்ந்தெழுதுக

1. இலக்கியம் என்பது எழுத்துவடிவில் வெளிப்படுத்தும் ஒரு கலையாகும்
2. அச்சிட்டு வெளியிடப்படும் அனைத்தும் இலக்கியமே
3. வாழ்க்கை அனுபவங்களிலிருந்து இலக்கியம் உருவாகிறது
4. இலக்கியங்கள் உயர்ந்த எண்ணங்களை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டிருக்கும்

A) 1, 2 சரி B) 1, 3 சரி C) 2, 3 சரி D) 1, 4 சரி

71. ஓர் இலக்கியத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதற்கு மேலாக எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆய்வு

A) விளக்கமுறைத் திறனாய்வு B) ஒப்பீட்டுத் திறனாய்வு
C) அழகியல் திறனாய்வு D) பாராட்டுத் திறனாய்வு

72. இன்றைய இலக்கிய ஆய்வியலில் மிகவும் செல்வாக்குடைய ஆய்வு எது?

A) பாராட்டுமுறைத் திறனாய்வு

B) மொழியியல் ஆய்வு

C) அமைப்பியல் ஆய்வு

D) வரலாற்று ஆய்வு

73. பொருத்துக

| | |
|---|---|
| a. விமரிசனக்கலை | 1. தொ.மு.சி.ரகுநாதன் |
| b. இலக்கிய விமரிசனம் | 2. அ.ச. ஞானசம்பந்தன் |
| c. இலக்கியக்கலை | 3. தி.சு.நடரசன் |
| d. திறனாய்வுக்கலை | 4. க.நா. சுப்பிரமணியம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 4 | 1 | 3 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

74. கீழ்வரும் படைப்புக்களில் பெண்ணியப்படைப்பு எது?

A) சொல்லப்பட்ட மனிதர்கள்
B) சுழலில் மிதக்கும் தீபங்கள்
C) இலையுதிர்காலம்
D) மாதொருபாகன்

75. ஆராய்ந்தெழுதுக

1. அறிவியல் முறையில் இலக்கிய ஆய்வை மேற்கொள்வதே இலக்கிய ஒப்பீடு
2. ஒப்பீட்டின் முதற்படிக்குத் தேசிய இலக்கியமே வழிகோலியது
3. தேச இலக்கியம் என்ற பார்வை தேசியத்தன்மையைச் சுட்டுகிறது
4. ஒப்பிலக்கியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை முதன்முதலாகத் தமிழிற்கு அறிமுகப்படுத்தியவர் க. கைலாசபதி

A) 1, 2 சரி
B) 1, 2, 3 சரி
C) 2, 3, 4 சரி
D) அனைத்தும் சரி

76. ஒப்பீட்டுத்துறையில் மிக இன்றியமையாததாகக் கருதப்படும் ஆய்வு எது?

A) இலக்கிய வரலாறுபற்றிய ஆய்வு

B) இலக்கிய மொழிபற்றிய ஆய்வு

C) இலக்கிய கோட்பாடுபற்றிய ஆய்வு

D) இலக்கிய வகை பற்றிய ஆய்வு

77. பொருத்துக

| | |
|---|---|
| a. பொன்னீலன் | 1. நவீனத்துவம் |
| b. சாருநிவேதிதா | 2. தலித்தியம் |
| c. அம்பை | 3. பின்நவீனத்துவம் |
| d. ராஜ்கௌதமன் | 4. பெண்ணியம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 3 | 2 | 1 | 4 |

78. ஆராய்ந்தெழுதுக

1. பின்நவீனத்துவம் பெருங்கதையாடல்களை ஆதரிக்கிறது
2. பின்நவீனத்துவம் கட்டவிழ்ப்புக் கொள்கையின் அடிப்படையிலானது
3. பின்நவீனத்துவம் நூல்களைப் பிரதி என்றே குறிப்பிடும்
4. பின்நவீனத்துவம் வாழ்வியல் விழுமங்களை ஊக்குவிக்கிறது

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 3, 4 சரி D) 1, 2, 3 சரி

79. கீழ்வரும் நூல்களில் மொழிபெயர்ப்போ தழுவலோ அல்லாத நூல் எது?

A) ஆசியஜோதி B) குடும்பவிளக்கு
C) மனோன்மணீயம் D) இரட்சண்ய யாத்ரிகம்

80. பொருத்துக

| | |
|---|---|
| a. ஒப்பிலக்கிய அறிமுகம் | 1. கு.வெ. பாலசுப்பிரமணியம் |
| b. ஒப்பியல் இலக்கியம் | 2. தமிழண்ணல் |
| c. ஆய்வியல் நெறிகள் | 3. க. கைலாசபதி |
| d. மொழிபெயர்ப்பியல் | 4. சு. சண்முக வேலாயுதம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 4 | 2 | 1 | 3 |
| D) | 3 | 1 | 4 | 2 |

81. ஆராய்ந்தெழுதுக

1. மொழிபெயர்ப்பு மூலத்தின் உணர்வு முழுவதையும் பெற்றிருக்கவேண்டும்
2. சுருக்கமும் செறிவும் மொழிபெயர்ப்பின் அடிப்படையாகும்
3. மூலநூலை மிஞ்சும்படியாக சிறப்புடன் எழுதப்படுவதே நல்லமொழிபெயர்ப்பு
4. பொருள்புரியாத இடங்களில் மொழிபெயர்ப்பாளர் உய்த்துணர்ந்து மொழிபெயர்க்கலாம்

A) 1, 2, 3 சரி B) 1, 4 சரி C) 1, 2 சரி D) அனைத்தும் சரி

82. புகை தோன்றினால் அங்கு நெருப்பு உண்டென்று அறிவது எத்தகைய நெறி?

A) முன்மொழி நெறி B) உவமநெறி
C) கட்புலநெறி D) உய்த்துணர் நெறி

83. ஆராய்ந்தெழுதுக

1. ஆய்வுலகில் மிகுதியாகப் பயன்படும் ஆய்வுமுறை விளக்கவியல் ஆய்வுமுறையாகும்
2. சிக்கல்களை விளக்கி அவற்றை அணுகுவதற்குரிய வழிமுறைகளைத் தெரிவிப்பது இவ்வாய்வுமுறை
3. இது தகவல்களைத் துல்லியமாக அளவிட்டுக்கூறும் புள்ளிவிவர ஆய்வுமுறையாகும்
4. விளக்கவியல் ஆய்வுமுறை கண்டும் கேட்டும் உணர்ந்தும் பெற்ற தகவல்களை மதிப்பீடு செய்வதாகும்

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 1, 3 சரி D) 3, 4 சரி

84. பன்னிரு ஆழ்வார்களுள் சேரநாட்டைச்சார்ந்தவர்

A) நம்மாழ்வார் B) குலசேகர ஆழ்வார்
C) பெரியாழ்வார் D) திருப்பாணாழ்வார்

85. கீழ்வரும் மலையாள எழுத்தாளர்களில் ஞானபீடம் விருது பெற்றவர்

A) குமாரனாசான் B) மாதவிக்குட்டி
C) எஸ்.கே. பொற்றக்காடு D) ஐயப்பப்பணிக்கர்

86. அஞ்ஞாடி என்ற நாவலின் ஆசிரியர்

A) பூமணி B) சல்மா C) இமயம் D) பாமா

87. பொருத்துக

a. இராசமாணிக்கனார் — 1. ஓலைச்சுவடி
b. சு. சக்திவேல் — 2. மொழியியல்
c. செ.வை. சண்முகம் — 3. சோழர் வரலாறு
d. உ.வே. சாமிநாதய்யர் — 4. மொழிவரலாறு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 2 | 4 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D | 3 | 4 | 2 | 1 |

88. ஆராய்ந்தெழுதுக

1. பல்லவர்கள் கி.பி. 300 முதல் 850 வரை தமிழகத்தை ஆண்டவர்கள்
2. காஞ்சிபுரம் பல்லவர்களின் தலைநகராக விளங்கியது
3. மாமல்லபுரம் கடற்கரைகோயில் நந்திவர்மப் பல்லவனால் கட்டப்பட்டது
4. தமிழகத்தில் புகழ்பெற்ற குடைவரைக்கோயில்கள் பல்லவர் காலத்தில் எழுந்தவை

A) 2, 3, 4 சரி
B) 1, 3, 4 சரி
C) 1, 2, 4 சரி
D) அனைத்தும் சரி

89. வட்டெழுத்து முறையை மிக அதிகமாகப் பயன்படுத்தியவர்கள் யார்?

A) சோழர்கள்
B) பாண்டியர்கள்
C) பல்லவர்கள்
D) மராட்டியர்கள்

90. பொருத்துக

a. பெருமாள் திருமொழி — 1. சைவம்
b. பெரியபுராணம் — 2. பௌத்தம்
c. குண்டலகேசி — 3. சமணம்
d. சீவகசிந்தாமனி — 4. வைணவம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

91. கீழ்வரும் நாயக்க மன்னர்களைக் காலத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துக

A) திருமலைநாயக்கர், விசுவநாத நாயக்கர், இராணிமங்கம்மாள், சொக்கநாத நாயக்கர்

B) விசுவநாத நாயக்கர், திருமலைநாயக்கர், சொக்கநாத நாயக்கர், இராணிமங்கம்மாள்

C) இராணிமங்கம்மாள், விசுவநாத நாயக்கர், திருமலைநாயக்கர், சொக்கநாத நாயக்கர்

D) சொக்கநாத நாயக்கர், விசுவநாத நாயக்கர், திருமலைநாயக்கர், இராணிமங்கம்மாள்

92. தனித்து நிற்கும் எழுத்துமுறை எது?

A) கரோஷ்டி B) கிரந்தம் C) பிராமி D) வட்டெழுத்து

93. கீழ்வருபவர்களில் திருமந்திரத்தை மலையாளத்தில் மொழிபெயர்த்தவர்

A) எஸ். பரமேஸ்வர ஐயர் B) எஸ். ரமேசன் நாயர்,

C) ஆற்றூர் ரவிவர்மா D) சந்திரசேகரன் நாயர்

94. வேதபாடசாலை குறித்துக் கூறும் செப்பேடு எது?

A) வேள்விக்குடி செப்பேடு B) சின்னமன்னூர் செப்பேடு

C) கருநந்தடக்கன் செப்பேடு D) திருவல்லா செப்பேடு

95. கங்கைகொண்ட சோழன் என அறியப்படும் சோழமன்னன் யார்?

A) விஜயாலய சோழன் B) இராஜேந்திர சோழன்

C) இராஜராஜ சோழன் D) குலோத்துங்கச் சோழன்

96. குறிஞ்சித்தேன் என்னும் நாவலின் ஆசிரியர்

A) அநுத்தமா B) சிவசங்கரி

C) இராஜம் கிருஷ்ணன் D) அம்பை

97. ஆராய்ந்தெழுதுக

1. இன்று பேச்சுவழக்கில் உள்ள மொழிகளில் மிகவும் பண்பட்டமொழி தமிழ்
2. திராவிடமொழிகளில் வடமொழிக்கலப்பு அதிகம் இல்லாத மொழி தமிழ்
3. தமிழ்மொழி செந்தமிழ், கொடுந்தமிழ் என இருநிலைகளில் வழங்கப்பட்டது
4. செம்மொழி தகுதிபெற்ற மொழி தமிழ்

A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

98. தோப்பில் முகம்மது மீரானுக்கு சாகித்ய அக்காதமி விருது பெற்றுத்தந்த நாவல்

A) கடலோரகிராமத்தின் கதை B) சாய்வு நாற்காலி

C) கூனந்தோப்பு D) துறைமுகம்

99. கீழ்வரும் நாவல்களில் ஆ. மாதவன் எழுதிய நாவல் எது?

A) புனலும் மணலும் B) மறுபக்கம்

C) புத்தன்வீடு D) தேரோடும் வீதி

100. பல்வேறு வாரியங்கள் சிறப்புடன் செயல்பட்டுவந்தது யாருடைய ஆட்சிக்காலத்தில்?

A) சோழர் B) சேரர் C) பாண்டியர் D) பல்லவர்

101. கீழ்வரும் நூல்களில் ஆசிரியர் பெயர் தெரியாத நூல் எது?

A) தக்கயாகப்பரணி B) ஆதியுலா

C) தமிழ்விடுதூது D) தஞ்சைவாணன் கோவை

102. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

A) சீகன்பால்கு B) வீரமாமுனிவர்

C) ஜி.யு, போப் D) எல்லிஸ் பாதிரியார்

103. ஆராய்ந்தெழுதுக

1. ஓ.என்.வி. குறுப்பு அவர்கள் ஞானபீடம் விருது பெற்ற மலையாளக் கவிஞர்
2. இவர் கல்லூரிப் பேராசியராகப் பணியாற்றியவர்
3. இவர் ஏராளமான திரைப்படப் பாடல்கள் எழுதியுள்ளார்
4. ஓ.என்.வி. யின் முக்கியமான படைப்புகளுள் ஒன்று ‘பூமிக்கொரு சரமகீதம்’

A) 1, 3 சரி B) 2, 3, 4 சரி C) 1, 3, 4 சரி D) அனைத்தும் சரி

104. பொருத்துக

a. எம். டி. வாசுதேவன் நாயர் 1. தோட்டியுடெ மகன்

b. தகழி சிவசங்கரப்பிள்ளை 2. இரண்டாமூழம்

c. ஓடக்குழல் 3. சுகதகுமாரி

d. ராத்திரி மழை 4. ஜி.சங்கர குறுப்பு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 3 | 2 |
| B) | 2 | 1 | 4 | 3 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

105. பரமார்த்தகுரு கதையின் ஆசிரியர் யார்?

A) வீரமாமுனிவர் B) எச். கிருஷ்ணபிள்ளை

C) லா.ச. ராமாமிர்தம் D) நீல பத்மநாபன்

106. தனித்து நிற்பது எது?

A) மின்வணிகம் B) மின்னஞ்சல் C) மின்னணு D) மின்னிதழ்

107. 'Blogs' என்பது தமிழில் எவ்வாறு வழங்கப்படுகின்றது?

A) வலைப்பூக்கள் B) இணையம்

C) வலைதளம் D) குறுஞ்செய்தி

108. பொருத்துக

a. ஏற்காடு 1. காசர்கோடு

b. பேக்கல் கோட்டை 2. காஞ்சிபுரம்

c. வேடந்தாங்கல் 3. பாலக்காடு

d. நெல்லியாம்பதி 4. சேலம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 4 | 2 | 3 | 1 |

109. கேரளத்தில் பறவைகள் சரணாலயம் எங்கு உள்ளது?

A) கோவளம் B) மலம்புழை C) பொன்முடி D) குமரகம்

110. நாட்டுப்புறவியலுடன் நெருங்கிய தொடர்புடையவர்

A) இரா. மீனாட்சி B) எஸ்.அகத்தியலிங்கம்

C) தே.லூர்து D) இரா.நாகசாமி

111. ஆராய்ந்தெழுதுக

1. நாட்டுப்புறப்பாடல்கள் தனிமனித/சமூக உணர்வுகளின் வெளிப்பாடுகள்
2. நாட்டுப்புறப்பாடல்களில் பேச்சுவழக்குச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருக்கும்
3. வந்த பாடலடியே மீண்டும் வருதல் நாட்டுப்புறப்பாடல்களின் தனித்தன்மை
4. நாட்டுப்புறப்பாடல்களுக்கும் இலக்கணக் கட்டுப்பாடு உண்டு

A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

112. பொருத்துக

| | |
|---|---|
| a. நல்லதங்காள் கதை | 1. .வரலாற்றுக்கதைப்பாடல் |
| b. இராமகதா பாட்டு | 2. புராணக்கதைப்பாடல் |
| c. நீலியம்மன் கதை | 3. சமூகக்கதைப்பாடல் |
| d. தேசிங்குராஜன் கதை | 4. மலையாளப்பாடல் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

113. பொருத்துக

| | |
|---|---|
| a. புஷ்பவனம் குப்புசாமி | 1. தோல்பாவைக்கூத்து |
| b. அம்மாப்பேட்டை கணேசன் | 2. நாட்டுப்புறப்பாடல்கள் |
| c. சுப்பு ஆறுமுகம் | 3. தெருக்கூத்து |
| d. புரிசை கண்ணப்ப தம்பிரான் | 4. வில்லுப்பாட்டு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 2 | 4 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

114. பழமொழி அல்லாதது எது?

A) எறும்பூரக் கல்லும் தேயும்

B) பழகப்பழகப் பாலும் புளிக்கும்

C) கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

D) ஆடிக்காற்றில் அம்மியும் மிதக்கும்

115. ஆராய்ந்தெழுதுக

1. மனிதனைப்பற்றிய ஆய்வு மானிடவியல்
2. ஆங்கிலத்தில் இதனை Socicology என்பர்
3. மானிடவியலில் மொழியியல் மானிடவியல் என்றொரு பிரிவு உண்டு
4. மனிதன் தொடர்பான எதுவும் மானிடவியலுக்கு அன்னியமல்ல

A) 1, 2, 3 சரி  B) 1, 3, 4 சரி  C) 2, 3, 4 சரி  D) 1, 2, 4 சரி

116. தீயசக்திகளையும் எதிரிகளையும் வெல்ல வழிகூறும் வேதம் எது?

A) சாமவேதம்    B) இருக்கு வேதம்

C) யஜுர்வேதம்    D) அதர்வண வேதம்

117. ஆராய்ந்தெழுதுக

1. உபநிடதங்கள் வடமொழியில் எழுதப்பட்டவை
2. உபநிடதம் யோகம், தத்துவம் போன்றவற்றைப்பற்றிப் பேசுகிறது
3. உபநிடதங்கள் வேதங்களுக்கு முன்பு தோன்றியவை
4. உபநிடதங்களில் ஒன்று கைவல்ய உபநிடதம்

A) 1, 2, 4 சரி    B) 1, 2, 3 சரி    C) 2, 3, 4 சரி    D) அனைத்தும் சரி

118. சிவபக்தியை சிறப்பித்துக்கூறும் நூல் எது?

A) திருப்புகழ்    B) திருப்பாவை

C) பெரியபுராணம்    D) கந்தபுராணம்

119. ஆராய்ந்தெழுதுக

1. சைவ சித்தாந்தம் ஆழ்வார்களின் சமயநெறி
2. சித்தாந்தம் என்பதற்கு சிந்தித்துக் கண்டறிந்த முடிவான உண்மை என்பது பொருள்
3. சைவ சித்தாந்தத்தைத் திராவிட அறிவின் சிறந்த வெளிப்பாடு என்பார் ஜி,யு. போப்
4. சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்களில் குறிப்பிடத்தக்கது திருவாய்மொழி

A) 1, 2 சரி    B) 2, 3 சரி    C) 1, 2, 3 சரி    D) 1, 3, 4 சரி

120. சிவஞானபோதம் எழுதியவர்

A) மெய்கண்டார்    B) திருவுந்தியார்

C) சிவப்பிரகாசம்    D) சிவஞான சித்தியார்